ஓம் சரவணஜோதியே நமோ நம

**பௌர்ணமி நன்னாளில்**

**விசுவாவசு ஆண்டு மார்கழி திங்கள் பௌர்ணமி பூஜை பலன் ஆசியாகவும்**

**ஆங்கில புத்தாண்டுக்கு உண்டான ஆசி பலனாகவும்**

**மகான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து ஆசி விளக்கம்**

03.01.2026

1. அருள் வடிவான சிவத்தைப் போற்றி
அறிவிப்பேன் அரங்கன் யான் அருளாசி
வரமென விசுவாவசு ஆண்டு மார்கழி திங்கள்
பௌர்ணமி விழா குறித்த ஆசி விளக்கமாகவும்

2. வல்லமைபட உதயமான இரண்டாயிரத்து இருபத்தாறு
ஆங்கில புத்தாண்டுக்குண்டான ஆசி விளக்கமாகவும்
என் சீடர் பெருமக்கட்கும்
ஓங்காரக்குடில் தொண்டர் பெருமக்கட்கும்

3. ஓங்காரக்குடிலைச் சார்ந்து ஞானம் தொடருகின்ற
உலக மக்களுக்கும் நன்மை குறித்து
அரங்கன் யான் அருளாசி உரைப்பேன்
வல்லமைபட ஓங்காரக்குடிலில் இன்று

4. அரங்கன் என் ஆசியோடும்
ஆறுமுகப் பெருமானின் தயவோடும்
விழா மிகச்சிறப்பாகவே நடந்தேறியது
வல்லமைபட மக்கள் கூட்டமோடு கூட்டமாக

5. சூட்சுமமாய் ஞானியர்களும் போகமகரிஷியும்
இதனொடு கோரக்கரோடு தேரையர் என
கொங்கணர் என பல்வேறு சித்தர் பெருமக்கள்
சூட்சும வடிவிலே வந்து

6. அரங்கன் என் குடிலில் அமுதை ருசித்து புசித்து
இனிதே அருளமுதிற்கு இன்னும் ஆக்கமும் சக்தியும்
தந்து சென்றுள்ளனர் உள்ளபடி இந்தவித
இன்னன்னாளில் உயர்வுபட வந்து கலந்து கொண்ட

7. எல்லோர்க்கும் உத்தமமாய் சகல காரிய வெற்றிக்கும்
உயர்வுபட இதனொடு வருகின்ற காலம்
அவர்கட்கும் ஆரோக்கியம் ஆயுள் கீர்த்தியென
பிணி சோடை அணுகாத வண்ணம் சர்வபாதுகாப்புக்கும்

8. அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு
ஆசி கொண்ட இவை நன்னாளில்
ஆற்றல்பட அரங்கன் யான் ஜோதியில் கலந்து
வரும் மக்கட்கெல்லாம் ஜோதி வழி

9. சூட்சும ஸ்பரிச தீட்சையாக
யானே அவரவர்க்கும் ஆற்றல்பட
ஒளிரூபிலே காட்சியும் ஆசியும்
அவரவர்க்கு வேண்டலுக்கு தக்கவாறு வழங்கியுள்ளேன்

10. உள்ளபடி இன்று என் தடத்தில் வந்து உயர்வாய்
தர்மத்தில் பொருளுதவி செய்து கொண்டு
தீட்சை ஏற்ற மக்கட்கெல்லாம் அச்சமற
அவர்கட்கு அனைத்து வகையும் முன்னேற்றம்

11. மாற்றங்கள் காணும் வண்ணம் என் சீடன்
ராம்குமார் கரம்பட யானே தீட்சை வழங்கியுள்ளேன்
உள்ளபடி இந்த நன்னாளில் குடிலின்
அமுதுக்கு இன்னும் சக்தி கூட்டியுள்ளேன்

12. உயர்வாக நிர்வகிக்கும் நிர்வாக பெருமக்கட்கும்
அரங்கன் யான் சர்வபலமாய் இணைந்து
அவர்களுக்குள் உள்ளேன் உள்ளபடி இதனோடு என்பால்
சரணாகதி கொண்டு இனிதே ஓங்காரக்குடிலில் தொண்டாற்றும்

13. தொண்டர் பெருமக்கள் யாவர்க்கும்
யான் எல்லாமுமாய் அவர்களுக்குள்
கலந்து ஆக்கமும் மனபலமும் தேகபலமும்
பயண பாதுகாப்போடு ஆயுள் ஆரோக்கியம் என

14. அனைத்து பலமும் தந்து காத்தருள் புரிகின்றேன்
அன்னதனால் ஓங்காரக்குடில் நோக்கி இன்னும்
தொண்டர் பெருமக்கள் பெருக நேரும்
எண்ணற்ற கிளை சங்கங்களும் இன்னும்

15. உருவாக நேரும் வருகின்ற காலம்
இந்த செயல் வடிவங்கள் பெருக இருப்பதாலே
இனி வருங்காலம் இன்னும் சங்கட்கும்
கிளை சங்கங்கள் செயல்பாட்டுக்கும்

16. நிர்வாகம் மேலும் தொண்டர் பெருமக்களை
அளவிலா வண்ணம் கூட்டும்
செயல்பாடுகளும் பெருக நேரும்
அதற்கு உகந்த வண்ணம் பொருளாதார பலமும்

17. அதற்கு உகந்த வண்ணம் செயல் வடிவங்களும்
பண்புள்ள மக்களையும் நிர்வாகத்தோடு
இணைத்து அரங்கன் யான்
அற்புதம் நிகழ்த்துவேன் அச்சமற வருகின்ற காலம்

18. குடில் தர்மத்துக்கு சீமான்களையும்
உயர் மக்களையும் வருகை கூட்டி இனிதே
தர்மத்தை இன்னும் வெகுவாக அதிகமாக்கி
அன்னதானங்கள் பல கிராமங்களிலும்

19. முழுமைபட சென்று செயல்வடிவம்
பெறுகின்ற வண்ணம் அங்கே
உண்மைபட மக்களெல்லாம்
பசிப்பிணி அகன்று ஆற்றல்பட அரங்கன் என்பால்

20. சரணாகதி கொண்டு வருகின்ற காலம்
சன்மார்க்கம் தழைத்து உலகமெங்கும்
சன்மார்க்க நெறி உயர் நெறியாக
உலகையே மாற்ற வல்லமை கொண்ட

21. சுத்த சைவ நெறிமுறையாக
உலக மாற்றம் கண்டு
அற்புதம் காணக் கூடும்
அன்னதனால் இன்றைய தின விழா

22. இந்த உலகோரே வியக்கும்படி
அரங்கன் என் தடத்தில்
அற்புதம் நிகழ்ந்துள்ளது
இதனொடு இன்று வந்து

23. கலந்து கொண்ட அன்பர்க்கெல்லாம்
இந்த ஆங்கிலப் புத்தாண்டின் துவக்கமாக
அனைவருக்கும் இந்த ஆண்டில்
எண்ணுகின்ற வகையிலும் காரியங்கள்

24. வெற்றி கொள்ளவும் அவர்கள் வேண்டி வந்த
வரங்கள் எல்லாம் இந்த ஆண்டில்
பூர்த்தி கொள்ளும் வண்ணம்
சித்தியாகும் வண்ணம் அரங்கன் யான்

25. அவரவர்க்கும் தீட்சையும் ஆசியும் வழங்கியுள்ளேன்
அன்னதனால் தொடர்பு கொண்ட யாவர்க்கும்
இந்த ஆண்டு மகிழ்வும் நிறைவும்
ஆரோக்கியமும் ஆயுள் பலமும்

26. திருமண விஷயங்களாகவும்
புத்திர விஷயங்களாகவும்
கடன் நிவர்த்திக்காகவும்
ஆரோக்கியம் ஆயுள் விருத்தி வேண்டி

27. வந்தவர்க்கும் ஞானம் கருதி
வந்தவர்க்கும் சர்வசித்தியும் இன்று
இன்றைய தினத்தில் அரங்கன் யான்
தந்துள்ளேன் உள்ளபடி எல்லா சித்திகளும் கூடி

28. உயர் மக்களாக அரங்கன் என்
குடில் உள்பணி வெளிபணி
செயலாற்றும் தொண்டர்களோடு
அளவிலா வண்ணம் உலக மக்களும்

29. வந்து சேர்ந்து தொண்டர் பெருமக்களாக மாறி
இந்த அரங்கன் கொள்கை
உலகளாவிய வண்ணம் பெருகி
இந்திய தேசம் அல்லாது

30. என் தொண்டை உயர்வாய்
செய்து வரும் மலேசியா பூமி
லண்டன் பூமி அரபு தேசங்கள் பூமி
என அனைத்து பூமிகளிலும்

31. ஆற்றல்பட இன்னும் சங்கங்களின்
சக்தி நிலை மாறி
ஆங்காங்கே அளவிலா வண்ணம்
தொண்டர் பெருமக்கள் கூடி

32. என் கொள்கை உலகளாவிய
தலையாய கொள்கையாக மாறி
வருகின்ற காலம் ஆறுமுகனே
வழிநடத்தும் ஞான ஆட்சிக் காலமும்

33. ஞானிகளே ஆளுகின்ற வண்ணம்
அற்புதங்களும் இனி நிகழக்கூடும்
அரங்கன் யான் அருளிய
அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி